www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 12

தேர்வு எண்

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 -25

நேரம் : 3.00 மணி] தமிழ் [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. க்ரீடம், ப்ரியா ஆகியவை எம்மொழிச் சொற்கள்?

அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) வடமொழி ஈ) உருது

2. திருக்குறள், அறத்துப்பாலில் அமைந்துள்ள இயல்களின் எண்ணிக்கை

அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 9

3. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

4. காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை – இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

5. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

6. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று ஐயப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) நீர் நிலைகள் ஈ) மழைத்துளிகள்

7. "உவா உற வந்து கூடும் உடுபதி ரவி ஒத்தார்" – யார்? யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், சுக்ரீவன் இ) இராமன், குகன் ஈ) இராமன், சவரி

8. "குழிமாற்று" – எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

9. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல,அது நம்பிக்கை மையம் – காரணம்

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ – அனைத்தும்

10. சாலைப் போக்குவரத்து உதவிக்கு தொலைபேசி எண்

அ) 100 ஆ) 101 இ) 108 ஈ) 103



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

12. மாமயிலை, சிறாஅர் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு முறையே

அ) உரிச்சொற்றொடர், இசைநிறை அளபெடை ஆ) உரிச்சொற்றொடர், இன்னிசை அளபெடை

இ) வினைத்தொகை, சொல்லிசை அளபெடை ஈ) வினைத்தொகை, ஒற்றளபெடை

13. பொருத்துக.

அ) திருவல்லிக்கேணி ஆறு – 1. மாவலிபுரச் செலவு

ஆ) பக்கிங்காம் கால்வாய் – 2. கல்கோட்டாி

இ) பல்லாவரம் – 3. அருங்காட்சியகம்

ஈ) எழும்பூர் – 4. கூவம்

அ) 1,2,4,3 ஆ) 4,2,1,3 இ) 4,1,2,3 ஈ) 2,4,3,1

14. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" – எனக் குறிப்பிடும் இலக்கியம்

அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) ஐங்குறுநூறு ஈ) புறநானூறு

பகுதி – II

பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. வாடைக்காலத்தில் பிற உயிரினங்களுக்கு என்ன நேர்ந்தது?

17. வசனம், கவிதை வேறுபாடு தருக.

18. "பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்" – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

கிணற்றுத்தவளை போல (அல்லது) அச்சாணி இல்லாத தேர் போல

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

விலை, விளை, விழை (அல்லது) தலை, தளை, தழை

24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

தாமரை (அல்லது) வெங்காயம்

26. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.

பொலிந்தான் (அல்லது) பேசுவார்

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

பூம்பாவாய் (அல்லது) தனியாழி

28. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்

ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

30. வெண்பாவிற்குரிய உரிய தளைகள் எத்தனை? அவை யாவை?

பகுதி – III

பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. "ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? குறள் வழி விளக்குக.

33. "மூன்றான காலம் போல் ஒன்று" – எவை? ஏன்? விளக்குக.

34. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

36. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் – குறிப்பு வரைக.

37. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

38. "மையாடல் விழா" – விளக்குக.

பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

*பிறப்பினால் எவர்க்கும் – உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் – நல்ல*
*செய்கை வேண்டுமப்பா!*
*நன்மை செய்பவரே – உலகம்*
*நாடும் மேற்குலத்தார்!*
*தின்மை செய்பவரே – அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்!* –கவிமணி தேசிகவிநாயகம்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. அ) நிரல்நிறை அணியை விளக்குக. (அல்லது) ஆ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (அல்லது) ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

42. வெண்பாவில் பொது இலக்கணம் யாது?

43. கருத்துப் படத்தைப் புரிந்துக் கொண்டு பத்தியாக எழுதுக.

சங்க இலக்கியங்கள்

எட்டுத் தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. (அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட ராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது– எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) சென்னை நகரத்தின் பண்பாட்டு அடையாளங்கள் மற்றும் போக்குவரத்து குறித்து விளக்குக.

46. (அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரை தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி – V

அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

47. அ) "விண்வேறு விண்வெளியில்........" எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) '.....நன்று' – என முடியும் குறளை எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com